www.PapaCambridge.com

UNIVERSITY OF CAMBRIDGE INTERNATIONAL EXAMINATIONS
General Certificate of Education Advanced Level

**TAMIL** **9689/02**

Paper 2 Reading and Writing **October/November 2011**

**1 hour 45 minutes**

Additional Materials: Answer Booklet/Paper

*6359525949*

**READ THESE INSTRUCTIONS FIRST**

If you have been given an Answer Booklet, follow the instructions on the front cover of the Booklet.
Write your Centre number, candidate number and name on all the work you hand in.
Write in dark blue or black pen.
Do not use staples, paper clips, highlighters, glue or correction fluid.

Answer **all** questions.
Write your answers in **Tamil** on the separate Answer Paper provided.
Dictionaries are **not** permitted.
You should keep to any word limits given in the questions.

At the end of the examination, fasten all your work securely together.
The number of marks is given in brackets [ ] at the end of each question or part question.

**முதலில் இந்த அறிவுறுத்தல்களைப் படியுங்கள்**

உங்களுக்கு தரப்பட்டிருக்கும் விடை எழுதும் புத்தகத்தில் முதல் பக்கத்தில் உள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுங்கள்.
விடை எழுதும் புத்தகத்தைக் கொடுப்பதற்கு முன்னால் அதில் உங்கள் பெயர், உங்கள் எண் உங்கள் தேர்வு நிலைய எண், ஆகியவற்றை எழுதுங்கள்.
கரு நீலம் அல்லது கருப்பு நிற பேனாக்களைப் பயன்படுத்துங்கள்.
ஸ்டேப்பிள்ஸ் பின்கள், பேப்பர் க்ளிப்புகள், பசை , திருத்தம் செய்யும் திரவம், ஹைலைட்டர்களைப் பயன்படுத்தாதீர்கள்.

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக.
தரப்பட்டுள்ள விடைத் தாளில் **தமிழில்** விடைகளை எழுதுக.
அகராதிகள் அனுமதிக்கப்படமாட்டாது
விடை எழுதுகையில் சொற்களின் அளவு குறிப்பிடப் பட்டிருந்தால் அதற்குள் விடை எழுதவேண்டும்.
விடைத்தாள்களை ஒன்றுடன் ஒன்று உறுதியாகக் கட்டுங்கள்.
ஒவ்வொரு வினா அல்லது வினாப்பகுதியின் இறுதியில் அதற்குரிய புள்ளிகள் அடைப்புக் குறிக்குள் [ ] தரப்பட்டிருக்கும்.

This document consists of **5** printed pages and **3** blank pages.

DC (NF/SW) 38512/3
© UCLES 2011
UNIVERSITY of CAMBRIDGE International Examinations

www.PapaCambridge.com

## பகுதி – 1

முதலில் கீழே தரப்பட்டுள்ள பத்தியைப் படியுங்கள்.
பின்னர் வினாக்களுக்கு விடை அளியுங்கள்.

### பசிப்பிணி அதிகரிக்கிறது

2007 ஆம் ஆண்டு முதல் உலகில் பசி என்னும் நோய் அதிகரித்து வருகிறது. பசியால் வாடுவோர் எண்ணிக்கை நூறு கோடியை நெருங்கிவிட்டது. அதாவது ஆறில் ஒருவர் பசியால் வாடுகின்றார். பொதுவாக எங்கு மக்களின் வருமானம் குறைவாக இருக்கிறதோ அங்கெல்லாம் பசிக் கொடுமை அதிகம் காணப்படுகிறது. இது வறுமைக்கும் பசிக்கும் உள்ள தொடர்பைக் காட்டுகிறது. ஆனால் நல்ல பொருளாதார நிலையுள்ள நாடுகளில் கூட எதிர்பாராத சம்பவங்களால் மக்கள் பசியால் வாட நேரிடுகிறது. ஒருவர் திடீரென்று வேலையை இழந்தாலோ, மருத்துவ செலவுகளுக்காக நிறைய பணம் செலவிட்டாலோ, கார் போன்ற வாகனங்களுக்கு செலவு செய்தாலோ சாப்பிடத் தேவையான பணம் இல்லாமல் போகக்கூடும்.

மிக மிக ஏழை நாடுகளில் பல குடும்பங்கள் வருமானத்தில் 75 விழுக்காட்டினை (75 சதவீதம்) உணவுக்காகவே பயன் படுத்துகின்றனர். முக்கிய உணவுப் பண்டங்களின் விலை சிறிது உயர்ந்தாலும் உணவு சாப்பிடுவதில் குறிப்பிடத்தக்க மாறுதல் ஏற்படும். முன்னர் ஒரு நாளைக்கு இரண்டு முறை சாப்பிட்டவர்கள், இப்போது ஒரு முறை மட்டுமே சாப்பிடுவார்கள். அது மட்டுமல்ல, சத்துக் குறைவான பொருட்களை பயன்படுத்தி சாப்பிடுவார்கள். இதில் பெரிதும் பாதிக்கப்படுவோர் பெண்களும் குழந்தைகளும்தான்.குழந்தைகளுக்காக தாய்மார்கள் தங்களுடைய உணவைத் தியாகம் செய்யவும் நேரிடுகிறது.

உலகின் சில பகுதிகளில் பக்கத்து நாடுகளில் நல்ல விளைச்சல் இருக்கும். ஆனால் போக்குவரத்து வசதிகள் இல்லாததாலோ, இரு நாட்டு வணிக உறவுகள் நன்றாக இல்லாததாலோ அந்த உணவுப் பண்டங்களை பயன் படுத்த முடிவதில்லை.

அதிகமாக உணவு உற்பத்தி செய்வோர் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு உணவு உதவி அனுப்பவேண்டும் என்று பலரும் கூறுவர். இது மேம்போக்கான அணுகுமுறை. அவசர கால நிலைமைகளைச் சமாளிக்க இது பெரிதும் உதவும் என்பதில் சந்தேகமில்லை .சட்ட ஒழுங்கு நிலைமையைப் பராமரிக்கவும் இது உதவலாம். ஏனெனில் தாங்களும் குடும்பத்தினரும் பட்டினி கிடந்தால் மக்கள் எந்த ஒரு செயலிலும் இறங்கத் தயங்க மாட்டார்கள். வன்முறையும், கொள்ளையடித்தலும் நிகழக்கூடும். உதவி என்னும் பெயரில் உணவு கிடைத்தால் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தலாம்.

ஆனால் நிரந்தரமாக பசிப் பிணியைத் தீர்க்க இந்த உணவு உதவி பயன்படாது. சரியாகத் திட்டமிடாத உணவு உதவியானது அதை வாங்கும் நாட்டுக்குத் தீங்கும் செய்யலாம். ஒரு நாட்டின் உணவுப் பழக்க வழக்கங்களை இது மாற்றிவிடலாம். மக்களின் பண்பாட்டையும் மாற்றக்கூடும். வெளிநாட்டு உணவுப் பண்டங்கள் குறைந்த விலையிலோ சுலபமாகவோ கிடைத்தால் உள்நாட்டு விவசாயிகளின் வருவாய் பாதிக்கப்படும். காலாகாலமாகப் பயிரிடப்படும் உள்நாட்டுப் பயிர்கள் மறைந்துபோய்விடும். உண்மையில் தற்காலிகத் தீர்வுகளை விட பிரச்சினைகளை மீண்டும் வராமல் தடுப்பதே மிகவும் பலன் தரும். இதற்கு செலவும் குறைவு.

www.PapaCambridge.com

1 கீழே தரப்பெற்றுள்ள ஒவ்வொரு விளக்கத்திற்கும் மிகப் பொருத்தமான சொல் அல்லது சொற்றொடரை மேலே கொடுக்கப்பட்டுள்ள பத்தியிலிருந்து எடுத்து எழுதுக.

எடுத்துக்காட்டு: புகை வண்டி ஓடும் பாதை - தண்டவாளம்

**(a)** தொகை [1]

**(b)** ஏழ்மை [1]

**(c)** அண்டை நாடு [1]

**(d)** வர்த்தக [1]

**(e)** வாழையடி வாழையாக [1]

[மொத்தம் 5 மதிப்பெண்கள்]

2 கீழே தரப்பெற்றுள்ள சொல்லின் அல்லது சொற்றொடரின் பொருளும் தெளிவாகக்கூடிய வகையில் அவற்றை உங்கள் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

எடுத்துக்காட்டு: அன்பு

விடை - குழந்தைகளிடம் பெற்றோர் அதிகம் அன்பு காட்டுகிறார்கள்.

**(a)** எதிர்பாராத [1]

**(b)** விழுக்காடு [1]

**(c)** பக்கத்து நாடு [1]

**(d)** அவசரகாலம் [1]

**(e)** பழக்க வழக்கம் [1]

[மொத்தம் 5 மதிப்பெண்கள்]

3 பின்வரும் வினாக்களுக்கு தமிழில் விடை தருக. பத்தியிலிருந்து சொற்களையோ வாக்கியங்களையோ அப்படியே எடுத்தெழுதாது சொந்த வாக்கியங்களில் விடை தருக.

**(a)** பசிப்பிணி ஏற்படக் காரணங்கள் என்ன? [2]

**(b)** முக்கிய உணவுப் பண்டங்களின் விலை ஏறினால் குடும்பத்துக்கு,குறிப்பாக, பெண்களுக்கு என்ன பாதிப்பு நேரிடும்? [3]

**(c)** அண்டை நாட்டு உணவுகளைப் பெறுவதில் உள்ள சிக்கல்கள் என்ன? [3]

**(d)** அவசர காலத்தில் கிடைக்கும் உணவு உதவி பசியைத் தணிப்பதோடு வேறு என்ன நன்மைகளைச் செய்யும்? [2]

**(e)** **(i)** பசிக் கொடுமையைத் தீர்க்க உணவு உதவி மட்டும் உதவாது.ஏன்? [4]

**(ii)** கட்டுரையாளர் கூறும் தீர்வு என்ன? [1]

[விடைகளுக்கு – 15 மதிப்பெண்கள், சிறந்த மொழித் திறன் – 5 மதிப்பெண்கள் மொத்தம் 20 மதிப்பெண்கள் ]

www.PapaCambridge.com

## பகுதி – 2

### வீண் செய்வதைத் தவிர்த்தால் வேதனைகள் அகலும்

இப்போது உலகம் முழுவதும் உணவுப் பொருட்களை வீணடிப்பது அதிகரித்து விட்டது. மேல் நாடுகளில் 'ஒன்று வாங்கினால், மற்றொன்று இலவசம்' என்று விளம்பரம் செய்வதால் தேவையே இல்லாமல் அவைகளை வாங்கி குளிர்ப்பதனப் பெட்டியில் வைக்கிறார்கள்.நாட்பட்டு அவை கெட்டுப் போகும்போது அவைகளை குப்பைத்தொட்டியில் போடுகிறார்கள்.இதைப் பத்திரிக்கைகள் எடுத்துக்காட்டி பிரச்சாரம் செய்தவுடன் கொஞ்சம் விழிப்புணர்வு ஏற்பட்டு இனிமேல் பொருட்களுக்குப் பதிலாக சலுகைக் கூப்பன்கள் தருவோம்.அவர்கள் வேண்டும்போது அவைகளைப் பயன்படுத்தலாம் என்று அறிவித்துவிட்டார்கள்.

அட, மேல் நாடுகளில்தான் இப்படி என்றால் இந்தியா போன்ற வளரும் நாடுகளில் வேறுவிதமாக உணவுகளை வீணடிக்கிறார்கள்.கல்யாணம், பிறந்த நாள் விழா என்ற பெயர்களில் இருபது அல்லது முப்பது வகைகளை இலையில் வைக்கிறார்கள். யாரால் அவ்வளவு சாப்பிட முடியும்? இறுதியில் எல்லாம் குப்பைத்தொட்டியில்தான். இன்னும் சிலரோ இலையில் வைத்த எல்லாவற்றையும் சாப்பிட்டால் தப்பாக நினைப்பார்கள் என்று பாதியை வைத்துவிட்டுப் போகிறார்கள்.இது நகர்ப்புற போலி நாகரீகம்.

பணக்காரர்கள், நடிகர், நடிகையர்களின் திருமண ஆடம்பர சாப்பாடு பற்றிப் படிக்கும்போது மிகவும் வருத்தமாக இருக்கிறது. இவைகளை ஏழை எளியவர்களுக்குக் கொடுக்கக்கூடாதாவென எண்ணத் தோன்றுகிறது. கிராமப்புறங்களிலோ வேறுவிதமாக உணவைப் பாழ்படுத்துகிறார்கள். அறுவடை செய்த தானியங்களைச் சரியாக சேமித்துவைக்காதபடி எலிகளுக்கும்,பறவைகளுக்கும் இரையாக்குகிறார்கள். ஏராளமான தானியங்கள் ஈரப்பதத்தால் மக்கி மடிந்துபோய்விடுகிறது.

ஒவ்வொருவரும் தன்னுடைய தேவைக்கும் அதிகமான பொருட்களை, நிலங்களை வைத்துக்கொள்ளக் கூடாது என்று காந்தி, வினோபா போன்ற தலைவர்கள் பிரச்சாரம் செய்தும்கூட எல்லோரும் மனம் மாறியதாகத் தெரியவில்லை. நல்ல வேளையாக இப்போது உலகம் முழுவதும் பொருட்களைப் பயன்படுத்திய பின்னரும் அவைகளை மீண்டும் பயன்படுத்தவேண்டும் (ரீசைக்ளிங்) என்ற விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. உலகில் பசிக் கொடுமை அகல வேண்டுமானால் பொருட்களை வீணடிக்காமல் இருந்தாலே போதும்.

இதோ ஒரு சின்ன எடுத்துகாட்டு. அந்தக் காலத்தில் மீன் பிடிப்பவர்கள் சிறிய படகில் போய் தங்களுக்குத் தேவையான வகை மீன்களை மட்டும் பிடிப்பார்கள். இப்போதோ பிரம்மாண்டமான இராட்சசக் கப்பல்களில் இயந்திரங்கள் மூலம் மீன் பிடிக்கிறார்கள்.இதில் நல்ல விலைக்குப் போகும் மீன்களை வைத்துக்கொண்டு மீதி நூற்றுக் கணக்கான டன்கள் எடையுள்ள மீன்களை கடலில் எறியும்போது அவை இறந்துவிடுகின்றன. இதில் அரிய வகை கடல் பிராணிகளும் உயிரிழப்பதை பத்திரிக்கைகளில் படிக்கிறோம்.சட்டங்கள் வழியாக இவைகளைத் தடுப்பதைவிட மக்களின் மனமாற்றத்தின் வழியாக இவைகளைத் தடுப்பதே மேல்.

www.PapaCambridge.com

4 பின்வரும் வினாக்களுக்கு தமிழில் விடை தருக. பத்தியிலிருந்து சொற்களையோ வாக்கியங்களையோ அப்படியே எடுத்தெழுதாது சொந்த வாக்கியங்களில் விடை தருக.

**(a)** ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம் திட்டத்தில் என்ன தவறு? இந்தப் பிரச்சினையைத் தீர்க்க என்ன செய்கிறார்கள் [4]

**(b)** இந்தியாவில் ஆடம்பர விருந்துகள் வைப்பதைக் கட்டுரையாளர் ஏன் குறை கூறுகிறார்? 2 காரணங்களை மட்டும் எழுதவும் [2]

**(c)** கிராமப் புறங்களில் உணவுப்பொருட்களைச் சேமிப்பதில் என்ன பிரச்சனைகள் உள்ளன? [3]

**(d)** காந்தி போன்ற தலைவர்களின் பிரசாரத்துக்குப் பின்னரும் மக்களின் அணுகுமுறை எப்படி இருக்கிறது [2]

**(e)** **(i)** தற்காலத்தில் மீன் பிடிப்பது எப்படி மாறியுள்ளது? [2]

**(ii)** இக்கால மீன்பிடி முறைகளில் என்ன குறைகள் உள்ளன? [2]

[விடைகளுக்கு – 15 மதிப்பெண்கள், சிறந்த மொழித் திறன் – 5 மதிப்பெண்கள் மொத்தம் 20 மதிப்பெண்கள் ]

5 பின்வரும் வினாக்களுக்கு 140 சொற்களுக்கு மேற்படாமல் தமிழில் விடை தருக.

**(a)** பசிக் கொடுமைக்கும் உணவுப் பொருட்களை வீணடிப்பதற்கும் உள்ள தொடர்புகளை இரண்டு பத்திகளிலிருந்தும் தொகுத்து எழுதவும். [10]

**(b)** ஒரு முறை பயன்படுத்திய பொருட்களை மீண்டும் பயன்படுத்த (ரீ சைக்ளிங்) நீங்கள் எப்படி உதவுகிறீர்கள்? சில எடுத்துக் காட்டுகளுடன் விடை தருக. [5]

[விடைகளுக்கு – 15 மதிப்பெண்கள், சிறந்த மொழித் திறன் – 5 மதிப்பெண்கள் மொத்தம் 20 மதிப்பெண்கள் ]

BLANK PAGE

www.PapaCambridge.com

**BLANK PAGE**

www.PapaCambridge.com

**BLANK PAGE**

www.PapaCambridge.com

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

University of Cambridge International Examinations is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of University of